RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1324

OPEN ACCESS

# பாண்டிய நாட்டுப் புலவர்களைத் தனித்து அடையாளப்படுத்தல்: பரிபாடல் வழி

இ. முனியசாமி [அ, *], மு. முனீஸ்மூர்த்தி [அ]

[அ] தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி) (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது), திருச்சிராப்பள்ளி-620017, தமிழ்நாடு, இந்தியா

# A Paripaadal Perspective on the Unique Identification of Pandiya Nadu Poets

I. Muniasamy [a, *], M. Munees Moorthy [a]

[a] Department of Tamil Research Center, Bishop Hiper College (Autonomous) (Affiliated to Bharathidasan University), Thirichirapalli-620017, Tamil Nadu, India

* Corresponding Author: munish0423pandi@gmail.com

Received: 01-06-2022
Revised: 22-08-2022
Accepted: 04-09-2022
Published: 21-11-2022

Check for updates

## ABSTRACT

Paripadal is one of the texts of Sangam literature. Among the 13 poets who sang paripadal, the people of Pandiya Nadu have been singled out in this article. Everyone knows that Paripaadal is a Pandiya Nadu. In addition to Madurai, Vaiyai, Tiruparangunram, and Azagarkoil are found as hymns in this book. Its songs are sung on the topics of Vaiyai, Sevvel, and Thirumal. It is not possible to conclude that all the poets who sang were poets of Pandiya Nadu, as the scene of the song was in the Pandiya Nadu areas around Madurai. Some of the poets have sung the praises of the Pandiya region or the Pandiya king in allegorical and laudatory terms in the context of praising the Pandiya region or the Pandiya king in their songs. However, this structure is not found in the songs of some poets. They sing only what they have come to sing. In the songs sung by poets, knowingly or unknowingly, they write about their land, country, and king in a state of admiration and through metaphors. On the basis of this, it is possible to identify the teachers Nallanthuvanar, Ilamperuvazhuthiyar, Karumpillaipoothanar, Keeranthaiyar, Kundramboothanar, Nappannar, Nalvazhuthiyar, Nallazhisiyar, and Mayodakovanar as Pandiya Nadu poets. However, this is not the case in the verses of some of the poets, and the four poets, Kaduvan Ilaveinanar, Kesavanar, Nallasthanar, and Nallazhuniyar could not be distinguished as Pandiya folk.

**Keywords:** Paripadal, Sangam literature, Sangam Poets, Pandiya Nadu

## முன்னுரை

தமிழ் மொழியில் பண்டைக் காலந்தொட்டுப் பல்வேறு இலக்கண, இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அவ்வாறு தோன்றிய இலக்கண, இலக்கியங்களைப் படைத்த புலவர்கள் தமிழ் நிலத்தைச் சார்ந்தோர்களாகவும் பிற நாட்டைச் சார்ந்தோர்களாகவும் இருந்துள்ளனர். எனினும் தமிழ் மொழியின் செவ்வியல் நூல்களைத் தமிழ் நிலத்தைச் சார்ந்த புலவர்களே பெரும்பான்மையும் பாடியுள்ளனர். இத்தமிழ் நிலத்தைச் சார்ந்த புலவர்கள் சேர, சோழ, பாண்டிய மன்னர்களது நாட்டில் பிறந்தவர்களாகவும் வாழ்ந்தவர்களாகவும் உள்ளனர். மூவேந்தர்களுள் தமிழ்ச் சான்றோர்களுக்கெனத் தனித்துச் சங்கம் அமைத்து அவர்கள் தமிழ்ப்பணியாற்ற பெரும் வழிவகை செய்தவர்கள் பாண்டிய

மன்னர்களாவர். இத்தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்ற புலவர்களாலும் அதில் இடம்பெறாப் புலவர்களாலும் பலச் சங்கச் செய்யுள்கள் பாடப்பெற்றுள்ளன. அவற்றுள் எட்டுத்தொகை அகப்புற நூலான பரிபாடலில் கிடைக்கப்பெறும் 22 பாடல்களுள் முதல் மற்றும் 22-ஆம் பாடலைப் பாடிய புலவர்களின் பெயர்கள் அறியப்பெறவில்லை. எஞ்சிய பாடல்களைப் பாடியவர்களாக 13 புலவர்களைக் காணமுடிகிறது. இவர்களுள் பாண்டிய நாட்டைச் சார்ந்த புலவர்களை இனங்கண்டு தனித்துவப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

## பரிபாடல்

சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று பரிபாடல். இப்பரிபாடலுள் வையை குறித்த பாடல்கள் அகம் சார்ந்தவையாகவும் திருமால், செவ்வேள் குறித்த பாடல்கள் புறம் சார்ந்தவையாகவும் இடம்பெற்றுள்ளன. இந்நூல் 70 பாடல்களால் இயற்றப்பட்டது என அறியமுடிகிறது. அவற்றுள் திருமால் -8, செவ்வேள் - 31, வையை -26, மதுரை -4, காளி -1 எனப் பாடப்பெற்றுள்ளன. எனினும் திருமால் -6, செவ்வேள் -8, வையை -8 என மொத்தம் 22 பாடல்கள் மட்டுமே இன்று காணப்பெறுகின்றன. இப்பாடல்களை 13 புலவர்கள் பாடியுள்ளனர். இந்நூல் பரிபாட்டு என்னும் பாவகையால் பாடப்பெற்றுள்ளது. பண் அமைத்துப் பாடப்பெற்ற நூலாகவும் பரிபாடல் காணப்பெறுகிறது. நூலைத் தொகுத்தோர், தொகுப்பித்தோர் பெயர்கள் அறியப்பெறவில்லை. பரிபாடல் நிகழ்களம் மதுரையைச் சுற்றிய பாண்டிய நாட்டுப் பகுதிகளாக இருப்பதால் பாடிய புலவர்கள் அனைவரும் பாண்டிய நாட்டார் என முடிவுக்கு வருதல் இயலவில்லை. சில புலவர்கள் தான் பாடிய பாடல்களில் பாண்டிய நாட்டுப் பகுதியையோ பாண்டிய நாட்டு மன்னனையோ புகழவேண்டிய கட்டாடமற்ற சூழலில் உவமை நிலையிலும் போற்றுதல் நிலையிலும் பாண்டிய நாட்டு நிலப்பகுதிகளையும் பாண்டிய மன்னர்களையும் புனைந்து பாடியுள்ளனர். இதன் அடிப்படையிலேயே சிலரைப் பாண்டிய நாட்டார் என அடைவுபடுத்த முடிகிறது. பரிபாடலில் பாடிய 13 புலவர்களுள் பாண்டிய நாட்டைச் சார்ந்த புலவர்களைக் கீழ்வருமாறு வகைப்படுத்தலாம். அவை,

1. அரச மரபைச் சார்ந்த பாண்டிய நாட்டுப் புலவர்கள்
2. ஊர்ப்பெயரால் அறியலாகும் பாண்டிய நாட்டுப் புலவர்கள்
3. பாடல் கருத்துக்களால் அறியலாகும் பாண்டிய நாட்டுப் புலவர்கள்

## அரச மரபைச் சார்ந்த பாண்டிய நாட்டுப் புலவர்கள்

சங்கப் பனுவல்கள் பலவற்றிலும் சேர, சோழ, பாண்டிய அரச மரபைச் சார்ந்தவர்களும் மன்னர்களும் பல பாடல்கள் பாடியுள்ளனர். அவ்வகையில் பாண்டிய மன்னர்களாக இளம்பெருவழுதியார், நல்வழுதியார் ஆகிய இருவரும் பரிபாடற்கண் பாடல் பாடியுள்ளனர். இவ்விருவரும் கடைச்சங்க கால மன்னர்கள் என அறியமுடிகிறது.

### இளம்பெருவழுதியார்

பரிபாடற்கண் இளம்பெருவழுதியார் பாடியனவாகத் திருமால் குறித்த 15-ஆம் பாடல் ஒன்று காணப்பெறுகிறது. கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி எனும் பெயரில் புறநானூற்றில் 182-வது பாடல் ஒன்றும் காணப்பெறுகிறது. இவ்விரு பாடல்களைப் பாடியவர்களும் ஒருவராவர். எனினும் இளம்பெருவழுதியார் வேறு கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி வேறு எனச் சிலர் கருதுகின்றனர்.

ஆனால் இரு பாடல்களைப் பாடிய புலவர்களது இயற்பெயர்களில் வேறுபாடு காணப்பெறவில்லை. மாறாக கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதியார் எனும் பெயரிலுள்ள 'கடலுள் மாய்ந்த' என்பது மட்டுமே முன்னடையாக இடம்பெற்றுள்ளது. இம்முன்னடையானது இம்மன்னன் இறந்ததன் பின் நூலைத் தொகுத்தவர் அல்லது வேறொருவரால் இணைக்கப்பட்டிருக்கலாம். எனவே பெயரில் வேறுபாடின்மையானும் முன்னடை மட்டுமே புறநானூற்றுப் பாடலில் கூடுதலாக

இடம்பெற்றுள்ளமையானும் இரு பாடல்களைப் பாடியோரும் ஒருவரே எனக் கொள்ளுதலே பொருந்தும். இளம்பெருவழுதியார் குறித்து, "இவ்வேந்தன் கடைச்சங்க நாளில் விளங்கிய பாண்டியர்களுள் ஒருவனாவன். இளம்பருவத்திலேயே பேரறிவினனாக இருந்தமைபற்றி இவன் 'இளம்பெருவழுதி' என்ற பெயர் பெற்றனன் போலும். 'கடலுண் மாய்ந்த' என்னும் அடைமொழிகளால் இவன் கடலிற் கலமிவர்ந்து சென்றபோது அங்கு மூழ்கியிறந்திருத்தல் வேண்டுமென்பது புலப்படுகின்றது. இவன் தண்டமிழ்ப் புலமையிற் சிறந்த பெருந்தகை மன்னனாவன். இவன் இயற்றிய இரண்டு பாடல்கள் பரிபாடலிலும் புறநானூற்றிலும் உள்ளன" எனவும், "கடலுள் மாய்ந்த' என்னுமடைமொழி துஞ்சிய பின்பு இவருக்கு அமைக்கப்பட்டதென்பது சொல்லாமலே விளங்கும்" எனவும் குறிப்பிட்டுள்ளமையான் இரு பாடல்களைப் பாடியதும் ஒருவரே என்பதனை மேலும் உறுதிபடுத்துவனவாக உள்ளன (Sathasiva Pandarathar, 2007; Saminathaiyar, 1918). இளம்பெருவழுதியார் கடைச்சங்க காலத்தில் பாண்டிய நாட்டை ஆட்சிபுரிந்த பாண்டிய மன்னனாதலால் இவர் பாண்டிய நாட்டுப் புலவர் என்பது புலனாகிறது.

## நல்வழுதியார்

நல்வழுதியார் எனும் புலவர் சங்க இலக்கிய நூலான பரிபாடலின் 12-ஆம் பாடலன்றி அவர் பாடியனவாக வேறுபாடல்கள் ஏதும் காணப்பெறவில்லை. இவர் பெயரைக் கொண்டு காணும்போது இவரைப் பாண்டிய குடியினர் எனக் கருதவேண்டியுள்ளது. ஏனெனில் செழியன், வழுதி, மாறன், பஞ்சவன், தென்னவன், தென்னர் முதலான பெயர்கள் பாண்டிய மன்னர்களது குடிப்பெயரை உணர்த்துவனவாகும். எனவே நல்வழுதியார் பெயரில் இடம்பெற்றுள்ள 'வழுதி' எனும் சொல் பாண்டிய மன்னர்களது குடியினைக் குறிக்க வழங்கி வந்துள்ளமையான் இவர் பாண்டியர் குடியினர் என்பது புலனாகிறது.

நல்வழுதியார் குறித்து "வழுதியாரென்பது அவர் பாண்டியர் குடியிற் பிறந்தவரென்பதைக் காட்டுகிறது" (Saminathaiyar, 1918). எனவும், "இவர் பெயரமைதியால் இவரைப் பாண்டியர் குடியினர் என்று கருதலாம். மன்னர் மரபினரேனும், மாண்புற்ற செழுந்தமிழ்ப் புலமையால் சிறப்புற்றும் விளங்கியவர் இவர்" எனவும் குறிப்பிடுகின்றனர் (Govinthan, 1965). சதாசிவ பண்டாரத்தார் தனது 'பாண்டியர் வரலாறு' எனும் நூலில் 'நல்வழுதி' என்பவன் கடைச்சங்க கால மன்னனாக ஆட்சி புரிந்தவன். பரிபாடற்கண் பாடல் பாடியவன் எனக் குறிப்பிடுகிறார். மேற்குறித்த சான்றோர்களது கூற்றுக்களால் நல்வழுதியார் பாண்டியர் குடியில் பிறந்து, பாண்டிய நாட்டு மன்னனாக ஆட்சிபுரிந்து வந்துள்ளார் என்பது தெளிவாகிறது.

இப்புலவர் வையை ஆறு குறித்த தனது பரிபாடலில் வையை ஆற்றின் நீரோட்டச் சிறப்பும் அவ்வையை ஆற்றின் வெள்ளமானது மதுரையைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த மதிலை முட்டிச் சென்றதாகவும் குறிப்பிட்டுள்ளார். இவரது பாடல் வழி மதுரை நகரைச் சுற்றி முற்காலத்தில் மதில் சுவர்கள் அமைக்கப்பட்டிருந்தன என்பதை அறிய முடிகிறது. இவ்வாறு வையை ஆறு குறித்தும் மதுரையின் மதில் சிறப்புக் குறித்தும் குறிப்பிட்டுள்ள இவரது பாடல் கருத்தும் நல்வழுதியார் மதுரையில் வாழ்ந்தவர் என்பதை உறுதிபடுத்துகின்றது.

## ஊர்ப் பெயரால் அறியலாகும் பாண்டிய நாட்டுப் புலவர்கள்

பண்டைக் காலத்தில் புலவர்களது இயற்பெயர்களோடு அவர்களது சிறப்புகள், ஊர்ப் பெயர்கள், செயல்கள், தொழில்கள், குடிப்பெயர்கள் எனப் பலவற்றை இணைத்து வழங்கியுள்ளனர். அவ்வகையில் புலவர்களின் இயற்பெயர் தெரியாத போது அவர்களைத் தனித்து இனங்காண்பதற்காக அப்புலவர்களது ஊர்ப் பெயர்களை இணைத்தும் வழங்கி வந்துள்ளனர். அவ்வகையில் பரிபாடற்கண் நல்லந்துவனார், குன்றம்பூதனார் ஆகிய இரு புலவர்களின் இயற்பெயர்களோடு அவர்களது ஊர்ப்பெயர்களையும் இணைத்து வழங்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

## ஆசிரியர் நல்லந்துவனார்

நல்லந்துவனார் என்னும் புலவர் அந்துவன் எனவும் நல்லந்துவன் எனவும் நல்லந்துவனார் எனவும் ஆசிரியன் நல்லந்துவனார் எனவும் மதுரை ஆசிரியர் நல்லந்துவனார் எனவும் அழைக்கப்பெற்றுள்ளார். ஆசிரியர் நல்லந்துவனார் பாடியனவாக பரிபாடலில் (வையை (6,11,20) குறித்து மூன்று செவ்வேள் (8) குறித்து ஒன்று) 4 பாடல்களும் கலித்தொகையில்(நெய்தற்கலி) 33 பாடல்களும் அகநானூற்றில் (43) ஒன்றும் நற்றிணையில் (88) ஒன்றும் என மொத்தம் 39 பாடல்கள் சங்க இலக்கியத்தில் காணப்பெறுகின்றன. இவையன்றி கலித்தொகையைத் தொகுத்தவரும் அந்நூலுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியவரும் ஆசிரியர் நல்லந்துவனாரே என்பதும் அறிய முடிகிறது.

ஆசிரியர் நல்லந்துவனார் எனக் குறிக்கப்பெற்றிருப்பதால் இவர் ஆசிரியராக இருந்திருக்க வேண்டும் எனக் கொள்ளலாம். மதுரை ஆசிரியர் எனச் சுட்டப்பெறுவதால் நல்லந்துவனார் மதுரையில் வாழ்ந்தவர் என அறிய முடிகிறது. எனினும் 'அந்துவன்' எனும் பெயரைக் கொண்டு சிலர் இவரைச் சேரர் குடியினைச் சார்ந்தவர் எனவும் சேர நாட்டினர் எனவும் குறிப்பிடுகின்றனர். அவ்வாறு அவர் சேரர் குடியினைச் சார்ந்தவர் அல்லது சேர நாட்டினைச் சார்ந்தவர் என்பதற்கு வேறு அகச் சான்றுகளோ அல்லது புறச் சான்றுகளோ காணப்பெறவில்லை. மாறாக இவரது பாடல்கள் பாண்டிய நாட்டின் பெரிய ஆறாகிய வையையையும் மதுரையின் அருகில் இருக்கும் திருப்பரங்குன்றினையும் அக்குன்றில் உறைந்திருக்கும் முருகப் பெருமானையும் குறிப்பிடுகின்றன. அதேபோல் புலவர் நல்லந்துவனார் பாடல்களில் அரசர்கள் பற்றிய குறிப்புக்கள் எங்கும் இடம்பெறுதலைக் காணமுடியவில்லை. எனினும் கலித்தொகையின் 143-ஆம் பாடலில் 'தலைவிக்குக் காமநோய் மிகப் பல மலைகளைக் கடந்து சென்ற தலைவன் மீண்டு வந்து அவளிடம் சேர அவனால் இழந்த நலத்தை அகமகிழ்வோடு எய்தினள்' எனக் கூறவந்த புலவர் 'பாண்டிய மன்னனின் மனத்தைத் தெளிவித்த தேயத்தில் உள்ளவர் இன்பமுற்று வாழுமாறு தலைவி அகமகிழ்வோடு இன்பம் எய்தினள்' என்பதை,

"தென்னவன் தெளித்த தேஎம் போல்

இன்நகை எய்தினள் இழந்ததன் நலனே"

எனும் அடிகளில் உவமையாகப் பாண்டிய மன்னன் குறித்துக் குறிப்பிட்டுள்ளார். மேற்குறித்தவாறு நல்லந்துவனார் பாண்டிய நாட்டுப் பகுதிகளையும் பாண்டிய மன்னரையும் மட்டுமே குறிப்பிட்டுள்ளமையானும் பிற நாட்டுப்பகுதிகளையோ பிற மன்னர்களையோ தான் பாடிய பாடல்களில் பாடப்பெறாமையானும் நல்லந்துவனார் பாண்டிய நாட்டினர் என்பது புலனாகிறது (Viswanathan, 2007).

மேலும் "ஆசிரியர் நல்லந்துவனார், மதுரை ஆசிரியர் நல்லந்துவனார் என அழைக்கப்பெறுதலானும் பாண்டி நாட்டுப் பேராறாகிய வையையையும் அந்நாட்டுச் சிறப்புடைய குன்றுகளுள் ஒன்றாய திருப்பரங்குன்றையும் பாடியுள்ளமையானும் இவர் மதுரையில் வாழ்ந்தவர் என்பது பெறப்படும் (Govinthan, 1965). எனவும் "மதுரை, திருப்பரங்குன்றம் இவற்றின் இடைவழி, வையையாறு, திருமருந்துறை யென்பவற்றின் இயற்கைகளையும் ஆங்காங்கு நிகழ்ந்த பலவகைச் செய்திகளையும் விளக்கிக்கூறி யிருத்தலால் இவருடைய ஊர் மதுரையென்றும் 'கடன் முகந்துகொண்ட' என்பதை இயற்றியவரான மதுரையாசிரிய னல்லந்துவனாரென்பவர் இவரே யென்றும் தோற்றுகின்றன" எனவும் குறிப்பிட்டுள்ளமையான் இவர் பாண்டிய நாட்டின்கண் மதுரையில் வாழ்ந்தவர் என உறுதிபடக் கூறலாம் (Saminathaiyar, 1918).

## குன்றம்பூதனார்

குன்றம்பூதனார் என்னும் புலவர் பரிபாடலில் முருகப் பெருமான் குறித்த 9,18 ஆகிய இரு பாடல்களைப் பாடியுள்ளார். இப்புலவரது பெயரில் காணப்பெறும் 'குன்றம்' எனும் சொல் திருப்பரங்குன்றையே குறிப்பனவாக உள்ளது எனலாம். 'பூதனார்' எனும் இயற்பெயருடைய இப்புலவரை அவர் பிறந்த அல்லது பாடிய திருப்பரங்குன்றத்தின் பெயரை இவரது இயற்பெயருக்கு முன் இணைத்துக் 'குன்றம் பூதனார்' என அழைத்து வந்துள்ளனர்.

இவர் பாடியனவாகக் காணப்பெறும் இருபாக்களும் திருப்பரங்குன்றினையும் அக்குன்றில் உறைந்திருக்கும் முருகப் பெருமானையுமே புகழ்ந்து பாடுவனவாக உள்ளன. இப்புலவரது பாடல்களில் மதுரை மற்றும் திருப்பரங்குன்றச் சிறப்புக்கள் அன்றி பிற ஊர், நாடு அல்லது பிற மன்னர்கள் பற்றிய குறிப்புக்கள் ஏதும் காணப்பெறாமையான் இவர் பாண்டிய நாட்டினர் எனக் கருதலாம். அவையன்றி "ஊர் என்ற பொதுச்சொல்லால் சிறப்பித்து உரைக்கப்படுவது உறையூர், அதேபோலவே தமிழகத்தே குன்றுகள் பல நின்று தோன்றினும் முருகன் உறையும் சிறப்புடைய திருப்பரங்குன்றம் ஒன்றையே குன்று என்ற பொதுச்சொல்லால் புலவர்கள் வழங்குவர்" எனக் குறிப்பிடுவதானும் குன்றம்பூதனார் பாண்டிய நாட்டின்கண் உள்ள திருப்பரங்குன்றில் பிறந்தவர் அல்லது வாழ்ந்தவர் என்பதை அறிய முடிகிறது (Govinthan, 1954).

குன்றம்பூதனாரின் பாடல்களில் அவரது தமிழ்ப்பற்றும் பொருள் இலக்கண அறிவும் வெளிப்பட்டுள்ளமையைக் காண முடிகிறது. அவர்தம் பாடலில் அகவொழுக்கம் களவு, கற்பு எனும் இரு பிரிவுகளை உடையது. அவற்றுள் கற்பொழுக்கத்தைவிட களவொழுக்கமே சிறப்புடையது. கற்பொழுக்கத்தில் ஊடல் மூலமே இனபம் தரக்கூடும். எனவே கற்பினும் களவொழுக்கமே சிறப்புடையது எனப்புலவர் தன் அகப்பொருள் இலக்கண அறிவை இங்கு புலப்படுத்தியுள்ளமையைக் காணமுடிகிறது.

மேற்குறிப்பிட்ட இரு புலவர்களின் (மதுரை ஆசிரியர் நல்லந்துவனார், குன்றம்பூதனார்) பெயர்களுக்கு முன்னுள்ள ஊர்ப்பெயர்கள் வழி முன்னவர் மதுரையில் வாழ்ந்தவர் என்றும் பின்னவர் திருப்பரங்குன்றில் வாழ்ந்தவர் என்றும் அறிய முடிகிறது.

## பாடல் கருத்துக்களால் அறியலாகும் பாண்டிய நாட்டுப் புலவர்கள்

பண்டைக் காலப் புலவர்கள் பலரின் ஊர், நாடு குறித்துச் சான்றுகள் வழி பெரும்பாலும் அறிய இயலவில்லை. அவ்வாறு ஊர், நாடு குறித்துப் புறச்சான்றுகள் காணப்பெறா வகையில் அவர்தம் பாடல்களில் உள்ள அகச் சான்றுகளின் வழியே அப்புலவர்களது ஊர், நாடு குறித்து அறிய வேண்டியுள்ளது. புலவர்கள் தாங்கள் இயற்றும் பாடல்களில் அறிந்தோ, அறியாமலோ தமது ஊர், நாடு அல்லது தனது நாட்டு மன்னன் குறித்த சிறப்புக்களைப் படைத்துச் செல்கின்றனர். அவைகொண்டும் அப்புலவர்களது ஊர் அல்லது நாட்டை அறிந்துகொள்ள முடிகிறது. அவ்வகையில் பரிபாடற்கண் கரும்பிள்ளைப் பூதனார், கீரந்தையார், நப்பண்ணனார், நல்லழிசியார், மையோடக்கோவனார் ஆகியோர்தம் பாடல்களின் அகச் சான்றுகள் வழி அப்புலவர்கள் பாண்டிய நாட்டினர் என அறிய முடிகிறது.

### கரும்பிள்ளைப் பூதனார்

பரிபாடல் வையை குறித்த பத்தாவது பாடலைப் பாடியவர் கரும்பிள்ளைப் பூதனார் ஆவார். 'பூதனார்' என்பது இவரது இயற்பெயராகும். 'கரும்பிள்ளை' என்பது ஊர்ப்பெயராகவோ அல்லது அவரது நிறத்தைக் குறிக்கும் பெயராகவோ இருந்திருக்கலாம் என்பதை, "இவரும் பூதனார் என்னும் பெயருடைய புலவர்களுள் ஒருவராவர். 'கரும்பிள்ளை' என்பது இவரது ஊராகலாம், அன்றி இவரது உடலின் நிறத்தை ஒட்டியதென்றலும் பொருந்தும்" எனக் குறிப்பிடுகின்றார் (Puliyurkesigan, 2009). எனினும் இப்பெயரில் ஊர் ஒன்றும் இருப்பதாக அறியமுடியவில்லை. இவர் குறித்த வேறு குறிப்புக்களும் அறிதற்கில்லை. புறச்சான்றுகள் வழி கரும்பிள்ளைப் பூதனாரின் ஊர், நாடு குறித்து அறியமுடியாச் சூழலிலும் இவரது பாடலில் இடம்பெற்றுள்ள உவமைகள் வழி இப்புலவரது நாட்டை ஊகித்து அறியமுடிகிறது.

கரும்பிள்ளைப் பூதனார் தனது பாடலில் 'வறுமையினால் துன்பமடைந்த புலவர்கள் இரத்தலுக்கு ஏந்திய கைகள் நிறையுமாறு பொன்னை வாரி வழங்கும் பாண்டிய மன்னனைப் போல, வையையில் வரும் நீர் பாண்டியனுடைய இறைத்தன்மையை உலகமெல்லாம் பரவச்செய்து பாண்டிய நாட்டிலுள்ள

வயல்களிலெல்லாம் பொன்னைப் பரப்புகின்ற அதன் இயற்கையான தொழில் எப்பொழுதும் ஓய்வின்றி நிகழ்வதாக' என்பதை,

"இலம்படு புலவர் ஏற்றகை ஞெமரப்

பொலம் சொரி வழுதியின், புனல் இறை பரப்பி

செய்யில் பொலம் பரப்பும் செய்வினை ஓயற்க"

எனும் அடிகளில் குறிப்பிடுகிறார் (Saminathaiyar, 1918). மழை பொழிந்து நீர் பெருகி வயல்வெளிகளில் எல்லாம் பரவியது என்பதைக் கூறவந்த புலவர் அவற்றிற்கு உவமையாகப் பாண்டிய மன்னனின் வள்ளல் தன்மையைக் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு பாண்டிய மன்னன் குறித்துப் புகழ்ந்து கூறியுள்ளமையானும் இவரது பாடலில் பிற மன்னர் பற்றிய குறிப்புகள் இன்மையானும் கரும்பிள்ளைப் பூதனார் பாண்டிய நாட்டினர் என அறிய முடிகிறது.

## கீரந்தையார்

அகமும் புறமும் கலந்த நூலான பரிபாடலில் திருமால் குறித்து இடம்பெற்றுள்ள இரண்டாம் பாடலைப் பாடியவர் கீரந்தையாராவார். இவர் கீரன் என்பவரின் தந்தையாவர் எனக் குறிப்பிடுகின்றனர். கீரந்தையார் எனும் பெயரில் திருவள்ளுவமாலை பாடிய ஒருவரும் சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் கீரந்தையார் ஒருவரும் காணப்பெறுகின்றனர்.

சிலப்பதிகாரத்தில் காணப்பெறும் கீரந்தையார் கடைச்சங்க காலப் பாண்டியனான பொற்கைப் பாண்டியனின் ஆட்சிக் காலத்தில் பாண்டிய நாட்டில் வாழ்ந்தவர் ஆவார். இக்கீரந்தையார் குறித்து, 'கீரந்தை எனும் பார்ப்பான் பொருளீட்டும் பொருட்டு தன் மனைவியை விடுத்துப் பிரிந்து சென்றான். கணவன் பிரிவால் அவன் மனைவி அச்சம் கொள்ள, உனக்குத் துன்பம் நேரவண்ணம் பாண்டியன் பாதுகாப்பான் எனக் கூறிச் சென்றான். இவ்விருவரது உரையாடலை அதன் வழியாக வந்த பாண்டிய மன்னன் கேட்டான். அந்நாள் தொட்டு அவள் வீட்டை மன்னன் காத்து வந்தான். ஒருநாள் இரவு அவளது வீட்டில் பேச்சொலி கேட்க, அவள் கணவன் வந்ததை அறியாப் பாண்டிய மன்னன் கதவைத் தட்டினான். கீரந்தையாருக்கு ஐயம் ஏற்பட அவள் செய்வதறியாது நடுக்குற்றாள். அரச காவல் என்னைக் காக்கும் எனக் கூறினீர்! இன்று காவாதோ? என மனைவி கேட்க, அச்சொல் அரசன் செவியில் பழுக்கக் காச்சிய ஆணியினால் சுடுவது போல் இருந்தது. அரசன் தன் தவறுக்காக வாளால் தனது கையைக் குறைத்துக்கொண்டான். பின் பொன்னாலாகிய கையினை இணைத்துக் கொண்டு அரசாண்டு வந்தான் பொற்கைப் பாண்டியன்' எனச் சிலப்பதிகாரக் கட்டுரைக் காதை குறிப்பிடுகிறது.

மேற்குறித்த கீரந்தையார் வாழ்ந்த காலமும் பரிபாடல் எழுதப்பெற்ற காலமும் கடைச்சங்க காலமாகும். ஆகையால் பரிபாடல் பாடிய கீரந்தையாரும் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பெறும் கீரந்தையாரும் ஒரே காலத்தில் வாழ்நதவர்கள் எனக் கருதலாம். சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் கீரந்தையார் பாண்டிய நாட்டினர் என்பது வெளிப்படை. பரிபாடல் பாடிய கீரந்தையார் எந்நாட்டினர் என்பது வெளிப்படத் தெரியவில்லை. எனினும் இவர் பாண்டிய நாட்டின்கண் உள்ள அழகர்மலையில் உறைந்திருக்கும் திருமாலைப் புகழ்ந்து பாடியுள்ளார். எனவே இவரும் பாண்டிய நாட்டில் வாழ்ந்தவர் எனக் கருதலாம். இருவரும் ஒரே நாட்டில் சமகாலத்தில் வாழ்ந்தவர்கள் என்பதால் இருவரும் ஒருவரோ? என எண்ணத் தோன்றுகிறது. அவையன்றி இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி வட்டத்தில் கீரந்தை எனும் பெயரில் ஓர் ஊரும் உள்ளது. சங்கப் புலவர்கள் பலரும் தங்கள் ஊர்ப் பெயர்களையே தங்களது பெயராகக் கொண்டுள்ளனர். எனவே கீரந்தையார் பாண்டிய நாட்டின்கண் உள்ள 'கீரந்தை' எனும் ஊரில் பிறந்தவர் என்றும் கருதலாம். ஆகையால் சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் கீரந்தையாரும் பரிபாடல் பாடிய கீரந்தையாரும் ஒருவரே எனக் கருதுவதாலும், கீரந்தை எனும் பெயர் கொண்ட ஊர் பாண்டிய நாட்டில் இருப்பதாலும் கீரந்தையார் பாண்டிய நாட்டைச் சார்ந்தவர் எனக் கருதலாம்.

## நப்பண்ணனார்

பரிபாடல் பாடிய புலவர்களுள் செவ்வேள் குறித்த 19-ஆம் பாடலைப் பாடியவர் நப்பண்ணனார் ஆவார். இவர் பண்ணன் என்னும் இயற்பெயரினை உடையவர் என அறிய முடிகிறது. இவரது புலமையை உணர்ந்து 'ந'கர இடைச்சொல்லைப் பெயருக்கு முன் இணைத்து வழங்கியுள்ளனர். 'ஆர்' என்பது உயர்வு குறித்து வழங்கியதாகும். 'பண்ணன் என்னும் பெயர் பண்ணின் திறம் அறிந்திருத்தலால் அல்லது பண்ணை உடையவராதலால் இப்பெயர் வழங்கியிருத்தல் கூடும்' என அறிஞர்கள் கருதுகின்றனர். நப்பண்ணனார் பாண்டிய நாட்டினர் என்பதை அவர் பாடல் கருத்தாலும் சான்றோர் கூற்றுக்களாலும் அறிய முடிகிறது.

புலவர்கள் தான் சார்ந்த ஊர், நாட்டைத் தனது பாடல்களில் பாராட்டியுரைப்பது இயல்பு. அவ்வகையில் நப்பண்ணனாரும் மதுரை மாநகர் குறித்துக் கூறும்போது, 'அறிவாற்றலால் செய்யப்படும் சொற்போர்களிலும் உடலாற்றலால் செய்யப்படும் மற்போர்களிலும் என்றும் தோல்வியை அறியாத மதுரை மாநகர்' என்பதை, "புலத்தினும் போரினும் போர் தோலாக் கூடல்" (பரி.19:8) என்ற அடியின் மூலம் சிறப்பித்துக் குறிப்பிட்டுள்ளார். அதேபோல் பாண்டிய மன்னன் முருகப் பெருமானின் திருப்பரங்குன்றினை வலம் வந்தான் என்பதைக் கூறவந்த புலவர் 'நாடுகாவல் அறிவும் உலகியல் அறிவும் தமிழறிவும் ஆன்மீக அறிவும் ஒருங்கே பெற்றவன்' என்பதை "பலமாண் வழுதி" (பரி.19:20) என்ற அடியில் தனது மன்னனைப் புகழ்துரைத்துள்ளார். நப்பண்ணனார் தனது பாடலில் பிறரால் வெல்ல முடியாத மதுரை என மதுரை மாநகரினையும், பல் அறிவும் ஒருங்கே பெற்றவன் பாண்டியன் எனப் பாண்டிய மன்னனையும் புகழ்ந்துரைத்துள்ளமையான் இவர் பாண்டிய நாட்டினர் எனக் கருதலாம். இக்கருத்தினையே "நப்பண்ணனார் பாண்டிய நாட்டைச் சார்ந்தவர் என்பதற்குச் சான்றாக, பாண்டி நாட்டிற் பிறந்தவர், தாம் பிறந்த பாண்டி நாட்டின் கண்ணதாய பரங்குன்றினையும், அக்குன்றுறை குமரவேளினையும் பாராட்டிப் பணிவதோடு அந்நாட்டு தலைநகராம் கூடன்மாநகரையும் அந்நாட்டு அரசனையும் அவனைச்சூழ இருக்கும் அமைச்சர் முதலாயினோரையும் பாராட்டி மகிழும் பெரும்பற்றும் உடையவராவர். தாம் பாடிய பரிபாடற்கண் பாண்டி நாட்டுத் தலைநகராம் கூடலை, உலகத்துள்ளோர் அனைவரையும் ஒருங்கே வெல்லவல்ல பேராற்றலையும், பேரறிவும் உடையார்வாழ் கூடல் என்றும், பாண்டியனை அறிவானமைந்த அழகுடைப் பாண்டியன் என்றும், அவன் அமைச்சரைக் கடனறிந்த கண்போலும் அமைச்சர் என்றும் பாராட்டியுள்ளமை உணர்க" எனக் குறிப்பிட்டுள்ளமையும் இவர் பாண்டிய நாட்டினர் என்பதை மேலும் உறுதிபடுத்துவனவாக உள்ளது (Govinthan 1954).

## நல்லழிசியார்

நல்லழிசியார் பரிபாடற்கண் இரு பாடல்களைப் பாடியுள்ளார். இவர் பாடிய இரு பாடல்களில் 16-ஆம் பாடல் வையை குறித்தனவாகவும் 17-ஆம் பாடல் செவ்வேள் குறித்தனவாகவும் அமைந்துள்ளன. அழிசி எனும் பெயரில் பலர் இருந்துள்ளதை அறிய முடிகிறது. எனினும் நல்லழிசியார் பாண்டிய நாட்டினர் என்றே கருத வேண்டியுள்ளது. ஏனெனில் தனது பாடலில் திருப்பரங்குன்றின் தொலைவு குறித்துக் கூறவந்த புலவர், 'பல புகழ்ச்சி நிறைந்த பாடல் பல பொருந்திய கூடலுக்கும் பரங்குன்றத்திற்கும் இடைப்பட்ட பகுதி நிலம் மிக அண்மையானதே' என்பதை,

"பாடல் சான்ற பல்புகழ் முற்றிய

கூடலொடு பரங்குன்றின் இடை"

எனக் குறிப்பிடுகிறார் (Saminathaiyar, 1918). இங்கு நல்லழிசியார் மதுரை குறித்துச் சிறப்பித்துக் கூறவேண்டிக் கட்டாயம் இல்லாதவிடத்தும் பாடல் பல இயற்றப்பட்ட புகழ் நிறைந்த கூடல் மாநகர் எனக் குறிப்பிட்டுள்ளமை ஆராயத்தக்கதாகும்.

அதேபோல் வையை ஆற்றின் புது வெள்ளமானது மலையிடத்திலிருந்து மிளகு, சந்தனம், மலர், பொன், மணி முதலான பல பொருட்களையும் தன் நீரோடு கரையில் வந்து மோதியது. இக்காட்சி குறித்துக் கூறவந்த புலவர் 'வள்ளல் தன்மையுடைய தலைவனாகிய பாண்டியன் தன்னிடம் வருபவர்களுக்குப் பொருட்களைக் கொடையளிக்கும் தன்மைபோல் இருந்தது' என்பதை, "கரையே

கைவண் தோன்றல் ஈகைபோன்ம்" (பரி.16:1) என்ற அடியின் மூலம் குறிப்பிடுகிறார். இவ்வாறு புலவர் மதுரை மாநகரின் சிறப்புக் குறித்தும் பாண்டிய மன்னனின் கொடைத்தன்மை குறித்தும் தனது பாடல்களில் உவமையாகக் குறிப்பிட்டுள்ளமையான் இவர் பாண்டிய நாட்டினர் எனக் குறிப்பிடலாம். "அவர் தம்முடைய பாக்களிடையே பாண்டியர் தலைநகராம் கூடலைப் பாராட்டிப் போற்றியுள்ளமையானும், அப்பாண்டி நாட்டின் கண்ணதாய பரங்குன்றைப் பாடியுள்ளமையானும் புலவர் நல்லழிசியார் பாண்டி நாட்டிற் பிறந்தவராவர் எனக் கொள்க" எனக் குறிப்பிட்டுள்ளமையும் மேற்குறித்த கூற்றினை மேலும் உறுதிபடுத்துகின்றது (Govinthan, 1954).

## மையோடக்கோவனார்

மையோடக்கோவனார் பரிபாடலில் வையை குறித்த ஏழாம் பாடலைப் பாடியவராவார். இவரது பெயரில் வரும் ஓடம் என்னும் சொல் பண்டைக் காலத்தில் நீரினைக் கடக்கப் பயன்படுத்திய ஒன்றாக இருந்துள்ளது. இப்புலவர் பெயரில் இடம்பெறும் 'மை' எனும் சொல் அவரது நிறத்தை உணர்த்தியதாகவும், 'ஓடம்' என்பது அவர் செய்த தொழிலை அடிப்படையாகக் கொண்டும் வந்திருக்கக் கூடும் எனவும் கருதுகின்றனர். இவரது பெயர்க்காரணம் குறித்து "இவர் பெயர் குறித்துச் சிந்திக்கும் போது வையைக்கண் ஓடஞ் செலுத்தும் தொழிலினர் எனவும், அதனைச் சிறப்புறப் பலரையும் ஏவல் கொண்டு நிகழ்த்தியமையான் 'ஓடக்கோவனார்' எனப்பட்டனர் எனவும் தெரிகிறது. 'மை' என்பது இவரது வண்ணத்தையோ, அவர் செலுத்திய ஓடத்தின் வண்ணத்தையோ குறித்ததாகலாம்" எனக் குறிப்பிடுகிறார் (Puliyurkesigan, 2009).

மையோடக்கோவனார் தம் பாடல்வழி பாண்டிய நாட்டைச் சார்ந்தவர் எனக் கருதலாம். சான்றாக, இவர் பாடிய பரிபாடலில் வையையின் வெள்ளப்பெருக்கைக் கூறும்போது உவமையாக, 'வெற்றி முரசினையுடைய பாண்டிய மன்னர் தான் வெற்றிபெறக் கருதிய நாட்டை அடைவதற்கு நிமிர்ந்து செல்லும் அப்பாண்டியனது பெரிய படையின் நீண்ட அணிவகுப்பின் எழுச்சிபோல், தான் செல்லுமிடம் அரிது என்று பாராமல் இரவுபகலாக இடைவிடாது ஓடியது' என்பதை,

"வலனிரங்கு முரசிற் றென்னவ ருள்ளிய

நிலனுற நிமிர்ந்தானை நெடுநிரை நிவப்பன்ன

பெயலாற் பொலிந்து பெருமபுனல் பலநந்த

நலனந்த நாடனி நந்தப் புலனந்த"

எனும் அடிகளில் புலவர் குறிப்பிடுகிறார் (Saminathaiyar, 1918). பாண்டியனது படைச் சிறப்பைக் கூறியிருப்பதாலும் பாண்டிய நாட்டின்கண் செல்லும் வையை ஆற்றையும் அவ்வையை ஆற்றில் வாழும் மதுரை மக்களது வாழ்வியலையும் கூறியுள்ளமையானும் இப்புலவரது பாடலில் பிற நாடு, பிற மன்னர்கள் பற்றிய குறிப்புக்கள் இடம்பெறாமையானும் இவர் பாண்டிய நாட்டினர் என்பது புலனாம். மேலும் அவர்களும் மையோடக்கோவனாரைப் பாண்டிய நாட்டினர் என்றே குறிப்பிடுகிறார் (Saminathaiyar, 1918).

மேற்குறித்த கரும்பிள்ளைப் பூதனார், கீரந்தையார், நப்பண்ணனார், நல்லழிசியார், மையோடக் கோவனார் ஆகியோர்தம் பாடல் கருத்துக்களாலும் இவர்களது பாடல்களில் உவமைகளாகப் பாண்டிய மன்னனையும் பாண்டிய நாட்டுப் பகுதிகளையும் புகழ்ந்து கூறியுள்ளமையானும் அறிஞர் தம் கூற்றுக்கள் வழியும் இவர்கள் பாண்டிய நாட்டினர் எனஅறிய முடிகிறது.

## பெயர் அறியப்படாப் பாண்டிய நாட்டுப் புலவர்

70 பாடல்கள் கொண்டு இயற்றப்பட்ட பரிபாடலில் 22 பாடல்கள் மட்டுமே இன்று காணப்பெறுகின்றன. அவற்றுள் 20 பாடல்களை 13 புலவர்கள் பாடியுள்ளனர். முதல் மற்றும் இறுதிப் பாடல்களைப் பாடிய புலவர் பெயர், இசை வகுத்தோர் பெயர், பண்ணின் பெயர் ஆகியன

இடம்பெறவில்லை. அவ்விரு பாடல்களும் சிறுசிறு சிதைவுகளோடு காணப்பெறுகின்றன. பாடிய புலவரின் பெயர் காணப்பெறவில்லை என்றாலும் பாடலில் இடம்பெற்றுள்ள சான்றுகளைக் கொண்டு பாடிய புலவரின் நாட்டை ஊகித்து அறியமுடிகிறது. அவ்வகையில் பரிபாடலின் இறுதிப் (22) பாடலைப் பாடிய புலவர் பெயர் அறியப்படாத சூழலிலும் அப்பாடலில் கையாளப்பெற்ற உவமைவழி இப்பாடல் பாடிய புலவர் பாண்டிய நாட்டினர் எனக் கருதலாம். அச்சான்று வருமாறு,

‘மேகக் கூட்டங்கள் ஒளியுடைய வானைக்கொண்ட பொதிகை மலைக்குத் தலைவனானப் பாண்டியன் தன் பகைவரோடு போரிட்டு வென்ற போர்க்களத்தில், தோற்ற மன்னன் திறைப்பொருளாகக் கொண்டுவந்து வரிசைப்பட நிறுத்திய களிறுகளின் வரிசைபோல் வானத்திற் குழுமின. பகைவர் அழியுமாறு போரில் வென்ற பின்னரும் சினம் அடங்காத அவனது வெற்றிமுரசு முழங்குவதுபோல் அவை இடித்து இடித்து ஆர்ப்பரித்தன. அடங்காத பகைவரோடு சினந்து போர் புரியும் அவன் படை மறவரின் வில்லிடமிருந்து விசையுடன் புறப்படும் அம்புகள் போல விரைவான மழைத்துளிகளைச் சிதறின. அப்பாண்டிய மன்னனது வேற்படைபோல் கடிதாக மின்ன, அவன் குறையாது அளிக்கும் வள்ளல் தன்மைபோல மழையைப் பொழிந்தன. அங்ஙனம் பொழிந்த நீர் மண்ணின் மேல் இடையறாது திரண்டு பெருகிப் பாண்டியனது படைகள் மனவெழுச்சியுடன் பகைவர் நாட்டிற் புகுவதுபோலப் பாண்டிய நாட்டின் நிலப்பகுதி முழுவதிலும் பரவி, வைக்கோற்போர்கள் நிறைந்த வயல்களுள் சென்று பாய்ந்தது’ என்பதை,

“ஒளிறுவாள் பொருப்பன் உடல்சமத்து இறுத்த

களிறு நிரைத்தவைபோல கொண்மூ நொசிதர

லைத்தவ மணமுரசு எறிதர

தானைத் தலைத்தலை வந்துமைந்து உற்று”

எனும் அடிகள் குறிப்பிடுகின்றன. மழையின் மிகுதி குறித்துக் கூறவந்த புலவர் பாண்டிய மன்னனின் போர்ச்சிறப்பு, அவனது படைகளின் வீரம், வள்ளல் தன்மை போன்றனவற்றை உவமையாகக் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு பாண்டிய மன்னனை உவமித்துப் பாடியுள்ளமை கொண்டு பரிபாடலின் இறுதிப் பாடலைப் பாடிய புலவர் பாண்டிய நாட்டினர் எனக் கருதலாம் (Saminathaiyar, 1918).

## முடிவுரை

பரிபாடலில் 22 பாடல்கள் கிடைக்கப்பெறுகின்றன. அவற்றுள் இரு பாடல்களுக்குப் பாடிய புலவர் பெயர் அறியப்பெறவில்லை. ஏனைய இருபது பாடல்களைப் பாடியவர்களாக 13 புலவர்கள் காணப்பெறுகின்றனர். இவற்றுள் பெயர் அறியப்பெறாப் புலவர் ஒருவரும் பெயர் அறியப்பெறும் புலவர்களுள் ஒன்பது புலவர்களும் பாண்டிய நாட்டினர் என அறியமுடிகிறது. பரிபாடலில் பாண்டிய மன்னர்களான இளம்பெருவழுதியார், நல்வழுதியார் ஆகிய இருவரும் பாடல் பாடியுள்ளனர். இவ்விருவரும் பாண்டிய அரச மரபினர் என்பதால் இவர்கள் பாண்டிய நாட்டினர் என்பது வெளிப்படை. ஆசிரியர் நல்லந்துவனார், குன்றம்பூதனார் ஆகிய இரு புலவர்களது பெயர்களோடு இணைத்துக் குறிப்பிடப்பெறும் ஊர்ப் பெயர்கள் கொண்டும் அவர்தம் பாடல் கருத்துக்கள் கொண்டும் இப்புலவர்கள் பாண்டிய நாட்டினர் என அறியமுடிகிறது. கரும்பிள்ளைப் பூதனார், கீரந்தையார், நப்பண்ணனார், நல்லழிசியார், மையோடக் கோவனார் ஆகிய புலவர்களது ஊர்கள் வெளிப்படத் தெரியவில்லை என்றாலும் அவர்கள்தம் பாடல்களில் பாண்டிய மன்னர்கள் குறித்தும் பாண்டிய நாட்டுப் பகுதிகள் குறித்தும் சிறப்பித்துக் கூறியுள்ளமையான் இவர்கள் பாண்டிய நாட்டினர் எனக் கருதலாம். பாடல் பாடிய புலவர் பெயர் அறியப்பெறாத 22-ஆம் பாடலைப் பாடிய புலவரின் பாடலில் இடம்பெற்றுள்ள பாண்டிய மன்னன் குறித்த உவமைகள் வழி இப்பாடல் பாடிய புலவரும் பாண்டிய நாட்டினராக இருக்கக்கூடும் என அறியமுடிகிறது.

## References

Govinthan, K. (1954) Sangatamil Pulavar Varisai-14 (Athiyan Vinnathanar Muthaliya 80 Pulavarkal), Thirunelveli Thennindiya Saivasithantha Noopathippu Kalagam, Chennai, India.

Govinthan, K. (1965) Sangatamil Pulavar Varisai-15 (KuttuvanKannanar Muthaliya 65 Pulavarkal), Thirunelveli Thennindiya Saivasithantha Noopathippu Kalagam, Chennai, India.

Puliyur Kesigan, (2009) Paripadal Molamum Uraiyum, Saratha Publication, Chennai, India.

Saminathaiyar, U.V. (1918) Paripadal Molamum Parimelazhagar Iyatriya Uraiyum, Commercial Publication, Chennai, India.

Sathasiva Pandarathar, T.V. (2007) Pandiyar Varalaru, Nam tamilar Publication, Chennai, India.

Viswanathan, A. (2007) Kalithogai Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License